27 பிப் 2007

(ஆ) பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு, அலுவல் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், அடுத்தது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003–2004 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்று, 2004–2005 ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்கப்பெற்ற

1. அவை உரிமைக் குழு
2. சட்ட விதிகள் ஆய்வுக் குழு
3. அரசு உறுதிமொழிக் குழு
4. அவைக் குழு
5. மனுக்கள் குழு
6. நூலகக் குழு
7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

ஆகிய குழுக்கள் எடுத்துக் கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், மேற்படி குழுக்களின் பதவிக் காலத்தை வரையறுக்கும் பேரவை விதிகள், முறையே 227 (2), 239 (2), 248 (2), 253 (2), 261 (3), 264 (2), 268 (4) ஆகியவற்றைத் தளர்த்தி அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து

[திரு. சி. பொன்னையன்] [2005 ஏப்ரல் 12

2006 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும். மேலும், பேரவை விதி 231 (2)-ஐத் தளர்த்தி, அலுவல் ஆய்வுக் குழுவில் தற்போது பணியாற்றி வரும் உறுப்பினர்களே அடுத்த குழு நியமனம் செய்யப்பெறும் வரை பணியாற்ற வேண்டும்".

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது...

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குழுவினுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதைப் பொறுத்தவரையில், முடிவு எடுக்கலாம், தவறு இல்லை. ஆனால், அலுவல் நிர்ணயக் குழுவிலேயாவது குறைந்தபட்சம், எதிர்க் கட்சித் தலைவர்களையும் வைத்துக்கொண்டு, இதைப் பற்றிப் பேசியிருக்க வேண்டும். பேசாமலேயே, இன்று வரை யாருக்கும் தெரிவிக்கப்படாமலேயே, இன்று திடீரென்று குழுக்களின் பதவிக் காலம் 3-வது ஆண்டாக நீட்டிக்கப்படுகிறது என்று சொல்வது, எந்த வகையில் சரியாக இருக்கும் என்பது புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: எங்களைக் கலந்தாலோசித்திருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் பேச வேண்டிய விஷயம் இல்லை இது. அரசினர் தீர்மானம்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: கலந்தாலோசிக்க வேண்டும். கலந்தாலோசிக்காமல் செய்தால் அது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் பேச வேண்டியதில்லை. சரி. துரைமுருகன் அவர்களுடைய கருத்தை நீங்களும் வழிமொழிகிறீர்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: இல்லை, இல்லை. அதனாலே எங்களைப் புறக்கணித்ததைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

2005 ஏப்ரல் 12]

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுக் காலத்திற்கு ஒரே குழுவை, இன்னும் சொல்லப் போனால். .

(தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அவ்வளவுதான் வெளிநடப்புச் செய்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துரைமுருகன், ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசினர் தீர்மானம். பேரவை விதிகளின் அடிப்படையில் அரசினர் தீர்மானத்தை அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதிக்கத் தேவையில்லை. இது விதிகளினுடைய முறை. விதிக்குட்பட்டு அவை செயல்படுகிறது. விதியை மீறி நீங்கள் வெளிநடப்புச் செய்கிறீர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(குறுக்கீடுகள்) மணி, உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள், மணி. (குறுக்கீடு) நீங்கள் அமைதியான ஆள். உட்காருங்கள் நீங்கள். அவர் விளக்கம் சொல்லிவிட்டார் இல்லையா?

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குழுக்களினுடைய காலத்தை நீட்டித்து இருக்கிறார்கள். இது மூன்றாண்டுக் காலமாக இருக்கிறது. ஆண்டுக்கொரு முறை குழுக்களை மாற்றியமைப்பது வழக்கம். அது மரபாக இருந்துகொண்டு இருக்கிறது. ஏதோ அவசியத்

தேவையின் அடிப்படையிலே நீட்டிப்பதில் தவறு இல்லை. ஆனால் மூன்றாண்டுக் காலம் தொடர்ந்து நீட்டிப்பது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசியத் தேவைதான். எடுத்துக்கொண்ட பணி முடியவில்லை. ஆகவே நீட்டிப்பு என்று அமைச்சர் அவர்கள் காரணம் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுக் காலம். ஆண்டுக்காண்டு மாற்றுவதுதான் வழக்கம். அப்போது மூன்று ஆண்டுக் காலம் நீட்டிக்கத் தேவையில்லை. ஆண்டுக்கொரு முறை அதை மாற்றுகிறார்கள். வேகமாக அந்தப் பணிகளை முடித்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் மணி. இது விவாதத்திற்குரியது அல்ல. (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) (குறுக்கீடு) மணி, உட்காருங்கள். (குறுக்கீடு) துரைமுருகன் கையைப் பிடித்து இழுக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். பழனிசாமி எல்லாம் வெளியே போய்விட்டார். (குறுக்கீடுகள்) அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையைக் கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்த) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.